# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/37 - 2023 පෙබරවාරි මස 14 වැනි අඟහරුවාදා - 2023.02.14

*2319/37 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை பொறியியலாளர்களின் பேரவைச் சட்டம்**

2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை பொறியியலாளர்களின் பேரவைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவோடு சொல்லக்கூடிய 20(3) ஆம் பிரிவின் கீழ் நீர் வழங்கல் அமைச்சரினால் செய்யப்படுகின்ற கட்டளைகள்.

ரொஷான் ரணசிங்க (பா.உ),
நீர் வழங்கல் அமைச்சர்.

கொழும்பு,
2023, சனவரி 15.

**கட்டளைகள்**

1. இந்தக் கட்டளைகள் மேன்முறையீட்டுச் சபைக் கட்டளைகள் எனஅறிமுகப்படுத்தப்படுகிறது.

2. பொறியியலாளர் பேரவை மூலம் சட்டத்தின் 16(5) ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க மேன்முறையீட்டு சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

3. சட்டத்தின் 16(5) ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பிற்கு எதிரான மேன்முறையீடு ஒன்றினை விசாரணை செய்வதற்கு தீர்ப்பொன்று கிடைக்கப்பெற்று முப்பது (30) நாட்களுள் அந்த மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. பொறியியற் பேரவையின் மூலம் பொறியியற் தொழிலராக பதிவு செய்வதற்காக விண்ணப்பம் ஒன்றின் மீது கவனம் செலுத்தப்படுகின்ற காலத்துள் அல்லது ஒழுக்காற்று விசாரணை செயற்பாட்டுமுறையின் போது இயற்கைத் தன்மையின் அடிப்படைத் தன்மையினை மீறுதல் அல்லது துஷ்பிரயோகம் செய்தல் நடக்கிறதா இல்லையா என கவனம் செலுத்துவதற்காக சபையின் நிதியில் மேன்முறையீட்டு சபை நிறுவப்பட்டுள்ளது.


1A - G 38846 — 12 (2023/02)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

5. பொறியியற் பேரவையின் மூலம் மேன்முறையீட்டு சபையில் ஆஜராவதற்கு மற்றும் அவர்களது செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அவர்களுக்கு வசதிகள் செய்வதற்கு திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும்.

6. மேன்முறையீட்டுத் தவிசாளருக்குத் தேவையான எழுதுவினைஞர் குழாம் சபையின் ஊதியம் வழங்கல் நிதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

7. மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிக்கும் அல்லது தொடர்புபடுத்தும் சந்தர்ப்பம் ஒன்றின் போது மேன்முறையீட்டுச் சபை மூலம் மேன்முறையீட்டு சபை முன் ஆஜராகும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன தீர்க்கமாகக் குறிப்பிட்டு அவர்களின் பிரதிநிதியானால் அவர்களோடு மேன்முறையீட்டு சபையில் ஆஜராகுமாறு சகல பிரிவினருக்கும் பதிவுத் தபாலின் மூலம் அறிவித்தல் ஒன்றுஅனுப்ப வேண்டும்.

8. முதலில் ஆஜராகும் நாளில் மேன்முறையீட்டு சபை மூலம் முதலில் ஆஜராகும் நாள் முதல் நான்கு வாரங்களுக்குள் அவர்களின் எழுத்து மூலமான உரைகளை சமர்ப்பிக்குமாறு அத்தரப்பினருக்கு அறிவித்தல் வேண்டும்.

9. இலங்கை பொறியியற் பேரவையின் முறைப்பாடுகளை செயலாளருக்கு மேன்முறையீட்டின் போது சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் அல்லது இல்லாமலும் சபைக்கு முன் தோன்றமுடியுமாகும்.

10. சகல தரப்பினரதும் எழுத்து மூலமான உரையை சமர்ப்பித்த பின்னர் மேன் முறையீட்டு மூலம் வாய்மொழி மூலமான விவாதம் ஒன்று தேவை என நினைத்தார்களெனின் வாய்மொழியிலான விவாதத்தை முன் வைக்குமாறு பிரகடனம் செய்தல் வேண்டும்.

11. எழுத்து மூலமான மற்றும் வாய்மொழி மூலமான உரையினை கவனத்திற் கொண்டதன் பின்னர் மேன்முறையீட்டு சபையின் மூலம் கட்டளை ஒன்றிற்காக மேன்முறையீட்டினைக் கவனத்திற் கொள்ளவேண்டியதோடு இந்தக் கட்டளைகளின் இலக்கம் 14(i) அல்லது 14(ii) அறிவுறுத்தப்பட்ட கட்டளையாக பிரகடனம் செய்தல் வேண்டும்.

12. மேன்முறையீட்டுக்கு உரியதான ஒரு சட்ட ரீதியான ஆட்சேபனை தோன்றுமெனில் அந்த ஆட்சேபனைத் தொடர்பாக எல்லோருக்கும் முன்னர் அல்லது அவ் ஆட்சேபனை தோன்றிய பின்னர் மிக விரைவாக தாமதமில்லாமல் சபைக்கு தெரிவித்தல் வேண்டும்.

13. மேன் முறையீட்டு சபை மூலம் பொருத்தமானது எனக் கொண்டால் சட்ட ரீதியான ஆட்சேபனையை வேறு வேறாக எழுத்து மூலமான அல்லது வாய்மொழி மூலமான உரையோடு கவனம் செலுத்த வேண்டும்.

14. (i) மேன்முறையீடொன்று மேற்கொண்டிருக்கும் சந்தர்ப்பமொன்றின் போது சபை மூலம் அங்கு முறையான சட்ட ரீதியான அல்லது நீதிமன்ற அதிகாரம் இல்லையென அல்லது நாட்டின் ஒழுங்குவிதிகளுக்கு கட்டளைகளுக்கு மற்றும் சட்டங்களுக்கு எதிரானது எனக் கொள்ளப்பட்டால் அழைக்கப்படும் முதல் நாளிலேயே மேன்முறையீட்டினை அழைக்காமல் முதல் சந்தர்ப்பத்திலேயே மேன்முறையீட்டை நிராகரிப்பதற்கு சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சபையின் மூலம் மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களின் மேன்முறையீட்டை நிராகரிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்படின் சபைமூலம் காரணங்களை அறிவிப்பதோடு நிராகரித்தல் தீர்மானம் தொடர்பாக இலங்கை பொறியியற் பேரவை மற்றும் மேன்முறையீட்டாளரை அறிவுறுத்தல் வேண்டும்.

(ii) சபை மூலம் மேன்முறையீடு தொடர்பாக ஏகமானதான முடிவினை நிறைவேற்றும் சந்தர்ப்பமொன்றின் போது மேன்முறையீட்டாளர் உட்பட சகல தரப்பினரையும் கடிதமொன்றின் மூலம் அறிவுறுத்துவதற்கு சபை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

15. நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் பொறியியற் பேரவை நிதியில் பொருத்தமான கொடுப்பனவை பெற்றுக்கொள்ள மேன்முறையீட்டு சபையின் அங்கத்தவர்களுக்கு உரிமையுண்டு.

16. இந்த கட்டளைகளில் -

சட்டம் என்பது, 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவை சட்டம் ஆகும்.

"மேன்முறையீட்டு சபை" அல்லது "மேன்முறையீட்டு சபைகள்" அல்லது "சபை" எனப்படுவதும் 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மேன்முறையீட்டு சபை ஆகும்.

2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர்களின் பேரவை என்பதும் "பொறியியற் பேரவை" அல்லது "சபை" அல்லது "இலங்கை பொறியியற் பேரவை" இல்லையெனின் "இலங்கையில் பொறியியற் பேரவை" எனக் கருதப்படும்.

EOG 02-0144

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.